பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 16 ஞாயிற்றுக்கிழமை 04.12.2022 கதிர் 281

## வவுனியாவில் ரயிலில் மோதி குடும்பஸ்தர் பரிதாப மரணம்

(வவுனியா நிருபர்)

வவுனியா, மெனிக்பாம் பகுதியில் உள்ள ரயில் கடவையைக் கடக்க முயன்ற குடும்பஸ்தர் ஒருவர் ரயிலில் மோதுண்டு மரணமடைந்துள்ளார்.

இன்று காலை 7.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த நபர் செட்டிகுளம் பகுதியில் 2

# தீர்வு வழங்கும் பலம் எங்களிடமே உண்டு

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் முழக்கம்






பிரச்சினைகளால் சோர்ந்து போயிருக்கும் நாட்டை மேலும் நெருக்கடிக்குள் தள்ளுவதை விடுத்து குறித்த பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்கக்கூடிய ஒரே சக்தி ஐக்கிய மக்கள் சக்தியாகும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். 2

### இளைஞர் மாயம்

## மக்களின் உதவியை நாடிய பொலிஸார்



மாவனெல்ல, ஹிகுல பிரதேசத்தில் வசிக்கும் 20 வயதுடைய இளைஞரைத் 8

## ஆசிரியர் வீட்டில் 25 பவுண் திருட்டு

யாழ்., கோப்பாய் – நீர்வேலி வீதியில் உள்ள வீடொன்றில் இருந்து 25 பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளன என்று கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வீட்டில் இருக்கும் தம்பதி கிளிநொச்சியில் ஆசிரியர்களாகக் கடமையாற்றும் நிலையில் வீட்டுக்கு வந்தபோதே நகைகள் திருடப்பட்ட 2

## எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காதாம்

### விமல் கூறுகின்றார்

தற்போது நாடாளுமன்றத் தேர்தல் நடந்தால் பெரும்பான்மை ஆசனங்கள் எந்தக் கட்சிக்கும் கிடைக்காது என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், இப்போதைய நிலையில் 2

## பெரும் சிக்கலில் இலங்கை; வெளியேறுகின்றனர் பலர்

### சபையில் சஜித் சுட்டிக்காட்டு


இலங்கையில் இன்று பெரும் சிக்கலில் உள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றும் போது தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்று கையில், பிட்ச் தரப்படுத்தல் நிறுவனம் இலங்கையின் நீண்ட கால உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு மிகவும் அபாயகரமான நிலையிலுள்ளதாக வகைப்படுத்தியுள்ளது.

இந்த அவதானம் 8

## சந்திரிகாவை எவரும் தூக்கி வீசவே முடியாது

### சு.க. உப தலைவர் சமாளிப்பு



முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமார

துங்க, ஆற்றலும் அனுபவமும் கொண்ட சிறந்த மூத்த அரசியல்வாதி. அவரை எவரும் தூக்கி வீச முடியாது.

– இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் பேராசிரியர் ரோஹன லக்ஸ்மன் பியதாஸ தெரிவித்தார். 2

## தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கு புதிய செயலாளரை நியமிக்குக!

### ராதாவின் கட்சி அழுத்தம்

மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணிக்குப் புதிய பொதுச் செயலாளரை விரைவில் நியமிக்குமாறு வேலுசாமி இராதாகிருஷ்ணன் தலைமையிலான மலையக மக்கள் முன்னணி, கூட்டணியின் அரசியல் உயர்பீடத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் 8



## தாய்மார்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதைத் தடுக்க வேண்டும்

### தலதா அத்துக்கோரள எம்.பி. வலியுறுத்து



நாட்டின் நெருக்கடியைக் கருத்தில்கொண்டு குழந்தைகளின் தாய்மார்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதைத் தடுக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அத்துக்கோரள வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் 8

## ராஜபக்ஷக்களில் ஒருவரை பிரதமராக்கச் சதி முயற்சி

### ஒருபோதும் ஆதரவு வழங்கமாட்டோம் என்று அமைச்சர் பிரசன்ன திட்டவட்டம்



பிரதமர் பதவியிலிருந்து தினேஷ் குணவர்த்தனவை நீக்கி குவிட்டு ராஜபக்சக்களில் ஒருவரைப் பிரதமராக்க 'மொட்டு'க் கட்சியில் உள்ள ஒரு குழுவினர் திரைமறைவில் 2

### யாழ். பல்கலைக்கழகத்தில்

## புதிதாக இரு டிப்ளோமா கற்கைநெறிகள் ஆரம்பம்



வங்கியலும், நிதியும் டிப்ளோமா மற்றும் தொழில்சார் ஆங்கில டிப்ளோமா ஆகிய இரு டிப்ளோமா கற்கைநெறிகள் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் 8

## 400 வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்களின் உரிமம் இரத்து

### அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவிப்பு



சுற்றுலா விசாவில் ஆட்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி அவர்கள் தொடர்பிலான தகவல்களை வழங்குவதைத் தவிர்த்துக்கொண்ட 400 வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்களின் உரிமம் தடைசெய்யப்பட்டுள்ளது என்று 8

## தீர்வு வழங்கும் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கான சிறந்த அணி ஐக்கிய மக்கள் சக்தியிடம் உள்ளது என்றும், சரியான சிந்தனை, சரியான வேலைத்திட்டம் மற்றும் நிலையான தத்துவம் ஐக்கிய மக்கள் சக்தியிடம் உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேற்கூறிய அனைத்துப்பலத்தையும் பயன்படுத்தி இந்த நாட்டைக் கட்டியெழுப்பத் தான் தயாராக இருக்கின்றார் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கூறினார். நேற்று நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் கடுவெல தேர்தல் தொகுதிக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பெருந்திரளான மக்கள் கலந்துகொண்ட இந்தத் தொகுதிக் கூட்டத்தை ஐக்கிய மக்கள் சக்தியின் கடுவெல தொகுதி அமைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஹிருணிகா பிரேமச்சந்திர ஏற்பாடு செய்திருந்தார். ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தலைவர்கள் பலர் இதில் கலந்துகொண்டனர்.

எதிர்க்கட்சியில் இருந்தாலும் நாட்டுக்கு எப்படி சேவை செய்ய வேண்டும் என்பதை குறுகிய காலத்துக்குள் ஐக்கிய மக்கள் சக்தி நிரூபித்துக் காட்டியுள்ளது என்று தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், ஹுஸ்ம (மூச்சு) மற்றும் சக்வல (பிரபஞ்சம்) திட்டங்கள் இதற்குச் சிறந்த உதாரணம் என்றும் கூறினார்.

கோட்டாபய ராஜபக்ச நீட்டிய கெரட் அல்லது முந்திரி துண்டுகளைச் சாப்பிடுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி ஒருபோதும் தயாரில்லை என்றும், நாட்டின் நலனுக்காக ஜனாதிபதி,பிரதமர் பதவிகளை ஏற்பதற்கு நிபந்தனைகள் விதித்தது நாட்டுக்காகவேயாகும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

முழு நாடுமே ஹோ ஹோம் கோட்டா என்று கூறும் போது அதனை அங்கீகரித்து கண்டியில் இருந்து கொழும்பு வரை ஐந்து நாட்களாக ஹோ ஹோம் கோட்டா என்ற கோத்துடன் பாத யாத்திரை போராட்டம் மேற்கொண்ட ஐக்கிய மக்கள் சக்திக்கு ராஜபக்சவினருடன் இணைந்து ஆட்சி அமைக்க முடியாது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் கூறினார்.

## ஆசிரியர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடயம் தெரியவந்துள்ளது என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீட்டு அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த நகைகளே திருடப்பட்டுள்ளன.

முறைப்பாட்டுக்கு அமைய கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## வவுனியாவில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள தனது வீட்டிலிருந்து விவசாயக் காணியைப் பார்வையிடுவதற்காக மெனிக்பாம் நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்தபோது அந்தப் பகுதியில் அமைந்துள்ள ரயில் கடவையைக் கடக்க முற்பட்ட நிலையில் மன்னாரிலிருந்து மதவாச்சி நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த ரயிலுடன் மோதுண்டு படுகாயமடைந்தார்.

அவர் உடனடியாக அங்கிருந்தவர்களால் மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். எனினும், அவர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியிலேயே மரணமடைந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

செட்டிகுளம், துடரிக்குளம் பகுதியைச் சேர்ந்த கந்தையா மோகனதாஸ் என்ற 55 வயதுடைய குடும்பஸ்தரே இந்த விபத்தில் பலியாகியுள்ளார்.

சம்பவம் தொடர்பாக பறையனாலங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## ராஜபக்ஷக்களில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திட்டம்தீட்டுகின்றனர். இதற்கு ஒருபோதும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனுமதி வழங்கமாட்டார். நாமும் அசைந்து கொடுக்கமாட்டோம்.

–இவ்வாறு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

’பிரதமரை மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா? அந்தப் பதவிக்கு நீங்கள் முயற்சி செய்தமை உண்மையா?’ என்ற கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இந்த ஆண்டு மே 9ஆம் திகதி பிரதமர் பதவியிலிருந்து மஹிந்த ராஜபக்ச விலகிய பின்னர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் சிலர் கூடிப் பேசி என்னைப் பிரதமராக்க விரும்பினர். நான் மறுத்துவிட்டேன். அதன்பின்னர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவியேற்றார்.

கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதி பதவியிலிருந்து விலகிய பின்னர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகத் தெரிவாகினார். அந்தவேளையிலும் என்னைப் பிரதமராக்க ’மொட்டு’க் கட்சியில் உள்ள சிலர் விரும்பினர். அப்போதும் நான் மறுத்துவிட்டேன். என்னை விட அனுபவசாலிகள் கட்சியில் இருக்கின்றார்கள். அவர்களுள் ஒருவர் தான் பிரதமராக வேண்டும் எனக் கூறினேன்.

தினேஷ் குணவர்த்தனவை பிரதமராக்குவதற்கு முன்மொழிந்தவன் நான்தான். அதுமட்டுமல்ல, ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்குவதற்குக் கடுமையாக உழைத்தேன். அது எல்லோருக்கும் தெரியும்.

தற்போதைய நிலைமையில் புதிய பிரதமர் அவசியம் இல்லை. தினேஷ் குணவர்த்தனவை நீக்கிவிட்டு ராஜபக்சக்களில் ஒருவரைப் பிரதமராக்க ’மொட்டு’க் கட்சியில் உள்ள ஒரு குழுவினர் திரைமறைவில் திட்டம் தீட்டுகின்றனர். இதற்கு ஒருபோதும் ஜனாதிபதி அனுமதி வழங்கமாட்டார். நாமும் அசைந்து கொடுக்கமாட்டோம் – என்றார்.

## சந்திரிகாவை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திரிகாவுக்கு எதிராக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சம்பிரதாயத்துக்கு அமையவே நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் அவர் கூறினார். சந்திரிகாவின் கட்சி உறுப்புரிமை இரத்துச் செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து சு.க. உறுப்பினர்கள் குழு ஒன்று நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்தனகல்ல பகுதியில் அமைந் துள்ள ஹொரகொல்ல, பண்டாரநாயக்க சமாதிக்கு முன்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன மற்றும் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர ஆகியோரின் அச்சிடப்பட்ட பதாகையைத் தரையில் வீசி தேங்காய்களையும் உடைத்து கட்சி உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## எந்தக் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத் தேர்தல் ஒன்று நடத்தப்பட்டால் எந்தக் கட்சிக்கும் ஆட்சி அமைக்கும் பெரும்பான்மை கிடைக்காது. 80 ஆசனங்களை எந்தவொரு கட்சியும் எடுக்காது.

இருக்கின்ற மிகுதி இரண்டு வருடங்களுக்குள் ஏற்படும் சில மாற் றங்கள் இந்த எண்ணிக்கையில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும். கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது கோட்டாபய ராஜபக்சவுக்கு வழங்கிய 69 இலட்ச வாக்குகளில் பெரும் பகுதி ’மொட்டு’க்கு எதிராகவே உள்ளது – என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



40 வருடங்களுக்கு மேலான நம்பிக்கை மற்றும் நாடளாவியரீதியில் 400க்கும் அதிகமான முகவர்கள்
douglas & sons (pvt) ltd
290/25, Sri Sangharaja Mawatha , Colombo 10
0777755598 | 0701630209 | 0772211211
www.dslsolarenergy.com
MARKETED BY DSL, POWERED BY OKAYA & MICROTEK
BOC Sampath Bank COMMERCIAL BANK HNB

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மற்றோர் ஆணைக்குழுவா?

ஒரு பிரச்சினையைத் தீர்க்காமல் தள்ளிப் போட வேண்டுமானால் அதற்கு ஒரே வழி அவ்விடயத்தைப் பற்றி விசாரித்துப் பரிந்துரை தருவதற்கு ஓர் ஆணைக் குழுவை நியமிப்பதுதான்.

குறுகிய காலத்தில் அந்த ஆணைக்குழு விடயத்தை விசாரித்துப் பரிந்துரையைத் தர வேண்டும் என்று தான் ஆரம்பித்தில் அறிவிக்கப்படும். ஆனால் அந்தக் கால அவகாசத்தில் விடயம் முடியாது. அடிக்கடி கால நீடிப்புகள் வழங்கி, காலத்தை இழுபட விட, விவகாரத்தின் சூடும் தணிந்து விடும்.

பின்னர், சத்தம் சந்தடியின்றி ஆணைக்குழுவின் அறிக்கை நாட்டின் தலைமையிடமோ, ஜனாதிபதியிடமோ ஒப்படைக்கப்படும். அவர் அதனைப் பரிசீலித்து முடிவெடுப்பார் என்று கூறப்படும். ஆனால், அப்படியே பெரிய புத்தகமாக சமர்ப்பிக்கப்படும் அறிக்கை தீண்டுவாரின்றி, தேடுவாரற்றுக் கிடந்து காணாமல் போகும்.

சர்ச்சைக்குரிய அந்த விவகாரமும் தீர்க்கப்படாமல் சூடு தணிந்து இழுபட்டு அடங்கிவிடும்.

இலங்கை, இந்தியா உட்பட தெற்காசிய நாடுகளில் இந்த ஆணைக்குழு அல்லது கமிஷன் விசாரணை என்ற நாடகம் சர்வ சாதாரணம்.

அதிலும் இலங்கையில் இன்னொரு கூத்தும் நடந்தது. இனப்பிரச்சினைத் தீர்வை ஒட்டிய விடயங்களின் மீது காலத்திற்கு காலம் பல்வேறு ஆணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டன. பல்வேறு விசாரணைகள் நடத்தப்பட்டு, பல பரிந்துரைகள், அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின் மீது – அந்தப் பரிந்துரைகளின் அடிப்படையில் – நடவடிக்கை எடுக்கும்படி வற்புறுத்தியதும், அந்த எல்லாப் பரிந்துரைகளையும் படித்து, அவற்றின் அடிப்படையில் இறுதிப் பரிந்துரையை சமர்ப்பிப்பதற்கும் தனியான ஆணைக்குழுவை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்தார். அதாவது ஆணைக்குழு அறிக்கைகளைப் படித்து ஒரு பரிந்துரை தருவதற்கு தனியான ஓர் ஆணைக் குழு. அதை நியமித்தும் கூட ஒன்றும் நடக்கவில்லை – இன்னொரு ஆணைக்குழு அமர்வுகளுக்கான செலவினங்கள் பெருந்தொகையில் ஏற்பட்டமையைத் தவிர.

இப்போது ரணிலின் அரசில் மீண்டும் ஆணைகுழு குறித்து ஒரு பேச்சு அடிபடத் தொடங்கி இருக்கின்றது.

உள்நாட்டு யுத்தத்தின் பின்னர் மீண்டெழுந்த நாடுகளில் முக்கியமானது தென்னாபிரிக்கா.

அங்கு இன வன்முறைகளை அடுத்து ஏற்பட்ட மனக் காயங்களை ஆற்றுவதற்காக உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணை குழு ஒன்று நிறு வப்பட்டு, அதன் மூலம் ஆற்றுப்படுத்துகை முன்னெடுக்கப்பட்டது.

இதைப் போன்ற ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்று முன்னர் நல்லாட்சி அரசில் தான் பிரதமராக இருந்தபோது 2018 ரணில் விக்கிரமசிங்க முன்மொழிந்திருந்தார்.

இப்போது அதை அவர் மீளவும் நிறுவ முயலக்கூடும் என்று பேச்சடிபடுகின்றது. ஆணை குழுக்கள் மீதான நம்பிக்கைகளை இலங்கை மக்கள் – குறிப்பாக தமிழர்கள் – இழந்து தசாப்த காலங்கள் பல கடந்து விட்டன என்பதுதான் உண்மை நிலை.



## மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வு சங்கத்தால் மாணவர்களுக்கு கல்வி ஊக்குவிப்பு தொகை

மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வு சங்கத்தின் ஏற்பாட்டில் தமிழ் கத்தோலிக்க ஒன்றியம் (ஐக்கிய இராச்சியத்தின்) நிதி ஒதுக்கீட்டில் மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

நேற்று (சனிக்கிழமை) மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வு சங்கத்தின் தலைவர் அருட் தந்தை நவரட்ணம் அடிகளார் தலைமையில் இந்த நிகழ்வும் இடம்பெற்றது.

கல்வி ஊக்குவிப்பு தேவைப்படும் 51 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கு நிதி உதவி வருடம் தோறும் மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வு சங்கத்தால் வழங்கி வைக்கப்படுகின்றது. இந்த நிலையில் 2023 ஆண்டுக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவு மற்றும் ஊக்குவிப்பு கொடுப்பனவு அந்த மாணவர்களின் குடும் பங்களுக்கான உலர் உணவு பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட விவிலிய ஆணைக்குழுவின் இயக்குநர் அருட்கலாநிதி கிறிஸ்ரி ரூபன் பெர்னாண்டோ கலந்து கொண்டதோடு மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வு சங்கத்தின் பிரதிநிதிகள், உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.


## சுத்தானந்த இந்து இளைஞர் சங்க 70 ஆவது ஆண்டுவிழா!



வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் 70 ஆவது ஆண்டுவிழா நேற்று சிறப்பாக இடம்பெற்றது. நேற்று (சனிக்கிழமை) சங்க தலைவர் மருத் துவர் ப. சத்தியநாதன் தலைமையில் சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதற்கமைய வவுனியா கந்த சுவாமி ஆலயத்தில் இருந்து பாலர் மாணவர்களின் சமய குரவர்களின் வேடந்தாங்கிய ஊர்வலத்துடன் சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்திற்கு வருகை தந்தனர். இந்த நிகழ்வுகளில் பிரதம விருந்தினர்களாக செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் மற்றும் தமிழ் மணி அகளங்கன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## ஹற்றன் - நுவரெலியா பிரதானவீதியில் 25 அடி பள்ளத்தில் பாய்ந்த ஓட்டோ!




ஹற்றன் – நுவரெலியா வீதியில் குடாகம பகுதியில் 25 அடி பள்ளத்தில் பாய்ந்து ஓட்டோ விபத்துக்குள்ளாகியுள்ளதாக ஹற்றன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று (சனிக்கிழமை) அதிகாலை நுகேகொடையில் இருந்த வெலிமடை நோக்கி வந்த ஓட்டோவே இவ்வாறு விபத்துக்குள்ளா கியுள்ளது.

குறித்த ஓட்டோவில் மூவர் பயணித்துள்ள நிலையில் எவருக்கும் உயிர்சேதம் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை சாரதிக்கு ஏற்பட்ட தூக்க கலக்கமும், வேகக்கட்டுப்பாட்டை இழந்தமையும் விபத்துக்கு காரணமென ஆரம்ப கட்ட விசாரணைகள் மூலம் தெரியவருவதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

## கிராஞ்சி பகுதியில் கடலட்டை பண்ணைக்கெதிராக போராடும் 10 பேருக்கு நீதிமன்றம் அழைப்பாணை!




கிராஞ்சியில் கடலட்டை பண்ணைக்கெதிராக போராடும் 10 பேருக்கு நீதிமன்ற அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பூநகரி – கிராஞ்சி பகுதியில் கடலட்டை பண்ணைக் கெதிராக 65 ஆவது நாளாக மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் அழைப்பாணை விடுக்கப்பட்டவர்கள் தெரிவிக்கையில் வழக்கு தொடர்பில் தமக்கு எதுவும் தெரியாது எனவும் அண்மையில் இருவர் எவ்வித காரணமு மின்றி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப் பட்டிருந்தனர் எனவும் குறிப்பிடப்பட்டது.

# ஆப்கான் முன்னாள் பிரதமரை கொலை செய்ய நடந்த முயற்சி

## அவர் தப்பினார்; வேறொருவர் உயிரிழப்பு



காபுல்,டிசெ.04

ஆப்கானிஸ்தானின் முன்னாள் பிரதமர் குல்புதீன் ஹெக்மத்யாரைக் கொல்ல முயற்சி மேற்கொள்ளப்பட்ட சம்பவம் ஆப்கானிஸ்தானில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. ஆப்கானிஸ்தானின் ஹெஸ்ப்-இ-இஸ்லாமி கட்சியின் தலைவர் ஆக ஹெக்மத்யார் உள்ளார். ஆப்கானிஸ்தான் தலிபான்களின் ஆட்சி ஏற்பட்டமையை அடுத்து முன்னாள் அதிபர் உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் அந்நாட்டை விட்டு வெளியேறிவிட்டாலும், முன்னாள் பிரதமர் குல்புதீன் ஹெக்மத்யார் ஆப்கானிஸ்தானில் தான் உள்ளார்.

இந்நிலையில், ஹெக்மத்யாரும் அவரது ஆதரவாளர்களும் நேற்று கூடியிருந்த மசூதிக்குள், சந்தேகிப்படும் வகையில் பயங்கரவாதிகள் சிலர், பர்தா அணிந்தபடி நுழைந்து ஹெக்மத்யாரை குறிவைத்து நடத்திய தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டார்,

இருவர் காயமடைந்தனர். இந்த தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.



# திருமணத்துக்கு அப்பாலான பாலியல் உறவுக்குத் தடை!

## இந்தோனேஷியாவில் புதுச் சட்டம்

ஜகார்த்தா,டிசெ.04

இந்தோனேசியா நாடாளுமன்றத்தில் திருமணத்துக்கு அப்பாலான பாலியல் உறவுக்கு தடை விதிக்கும் சட்டப் பிரேரணை மீண்டும் கொண்டு வரப்பட்டுள்ளது.

திருமணத்துக்கு அப்பாலான பாலியல் உறவை தண்டனைக்குரிய குற்றமாக அறிவிக்கும் சட்டப் பிரேரணை கடந்த 2019 ஆம் ஆண்டு அந்த நாட்டு நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டது. அப்போது அந்த சட்டப் பிரேரணை எதிர்ப்பு தெரிவித்து அங்கு பெரிய அளவில் போராட்டங்கள் வெடித்தன. இதனால் அந்த பிரேரணை நிறுத்தி வைக்கப்பட்டது.

இந்த நிலையில் இந்தோனேசியா நாடாளுமன்றத்தில் திருமணத்துக்கு அப்பாலான பாலியல் உறவுக்கு தடை விதிக்கும் சட்ட மசோதாக மீண்டும் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்தப் பிரேரணை வருகிற 15 ஆம் திகதி நிறைவேற்றப்படும் என அந்த நாட்டின் நிதி மந்திரி எட்வர்ட் உமர் ஷெரீப் ஹியாரிஜ் தெரிவித்துள்ளார். இந்த சட்டம் திருமணத்துக்கு அப்பால் பாலியல் உறவு வைத்து கொள்வதையும், திருமணத்திற்கு முன் இணைந்து வாழ்வதையும் சட்டவிரோதமானது என்றும், இந்த சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்களுக்கு ஓர் ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்படும் என்றும் உமர் கூறினார்.

# இந்தியா போரைத் திணித்தால் போரிட பாகிஸ்தான் தயாராம்!

## அந்நாட்டின் புதிய தளபதி அறிவிப்பு



லாகூர்,டிசெ.04

பாகிஸ்தானின் புதிய இராணுவத் தளபதியாக ஆசிம் முனீர் கடந்த 24 ஆம் திகதி பொறுப்பேற்றார். இராணுவத் தளபதியாகப் பொறுப்பேற்றமையை அடுத்து ஆசிம் முனீர் முதல் முறையாக இந்தியாவுடனான எல்லைப்பகுதியை நேற்றுப் பார்வையிட்டார்.

ரக்ஷிக்ரி பகுதி இந்தியாவுடனான எல்லைப்பகுதியில் பாதுகாப்பு பணியில் உள்ள வீரர்களுடன் அவர் உரையாடினார்.

அதன் பின் பேசிய ஆசிம் முனீர் –

கில்கித் பல்கிஸ்தான் மற்றும் ஜம்மு–காஷ்மீர் குறித்து சமீபத்தில் இந்திய தலைமையிடமிருந்து பொறுப்பற்ற கருத்துகள் வருவதை நாங்கள் கவனத்தில் கொண்டுள்ளோம். எங்கள் மீது போர் திணிக்கப்பட்டால் தாய்நாட்டின் ஒவ்வொரு அங்குலப் பகுதியையும் பாதுகாக்க மட்டுமின்றி எதிரிகளை எதிர்த்து போரிடவும் பாகிஸ்தான் இராணுவம் தயாராக உள்ளது என்பதை உறுதியாக கூறிக்கொள்கிறோம்’ என்றார்.



# ஆப்கானில் பாக். தூதரை நோக்கி துப்பாக்கிச் சூடு; அவர் அருந்தப்பு!

## பாதுகாவலர் குறுக்கே பாய்ந்து சூட்டை வாங்கினார்

இஸ்லாமாபாத்,டிசெ.04

ஆப்கானிஸ்தானுக்கான பாகிஸ்தான் தூதர் உபைத்-உர்-ரஹ்மான் நிஜாமானி. இவர் நேற்று முன்தினம் ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலில் உள்ள பாகிஸ்தான் தூதரகத்தில் நடைபயிற்சி செய்து கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த மர்ம நபர்கள் சிலர் நிஜாமானியை நோக்கி துப்பாக்கியால் சரமாரியாக சுட்டனர்.

உடனிருந்த அவரின் பாதுகாவலர் குறுக்கே பாய்ந்து, அவரை காப்பாற்றினார். இதில் நிஜாமானியின் பாதுகாவலர் பலத்த காயம் அடைந்தார். இதையடுத்து துப்பாக்கி சூடு நடத்திய மர்மநபர்கள் அங்கிருந்து தப்பி சென்றனர்.

ஆப்கானிஸ்தானில் பாகிஸ்தான் தூதரை கொலை செய்யும் நோக்கத்தோடு தூதரகத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கி சூடு சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இது தொடர்பாக பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சகம் ஆப்கானிஸ்தான் தூதரை நேரில் அழைத்து சம்மன் வழங்கியது.

துப்பாக்கி சூடு சம்பவத்துக்கு கடும் கண்டனம் தெரிவித்ததோடு தாக்குதலுக்கான காரணமான நபர்களை நீதியின் முன் நிறுத்த ஆப்கானிஸ்தான் அரசை பாகிஸ்தான் வலியுறுத்தியுள்ளது.

இதனிடையே ஆப்கானிஸ்தானில் பாகிஸ்தான் தூதரகத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கி சூடு சம்பவத்துக்கு அமெரிக்காவும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir — மாலைப்பதிப்பு



# இந்தியாவின் ஜி-20 செயல்திட்டங்களுக்கு நாணய நிதியம் முழு ஆதரவு என அறிவிப்பு!

வொஷிங்டன், டிசெ.04

இந்தியாவின் ஜி-20 செயல்திட்டங்களுக்கு முழு ஆதரவு அளிப்பதாக சர்வதேச நாணய நிதியம் அறிவித்து உள்ளது.

வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளின் கூட்டமைப்பான ஜி-20யின் தலைமைத்துவத்தை தற்போது இந்தியா அலங்கரிக்கிறது. அதிகாரம் மிக்க இந்த அமைப்பு கடந்த முதலாம் திகதி முதல் இந்தியாவின் தலைமையில் செயல்பட்டு வருகிறது. இந்த அமைப்புக்கான கருப்பொருளை இந்தியா வெளியிட்டு உள்ளது. அதன்படி, 'ஒரே பூமி; ஒரே குடும்பம்; ஒரே எதிர்காலம்' என்ற கருப்பொருளை இந்தியா அறிவித்து இருக்கிறது.

ஜி-20 அமைப்பின் தலைவராக இந்தியா பொறுப்பேற்றிருப்பதை உறுப்பு நாடுகள் வரவேற்று உள்ளன. அதைப்போல இந்தியாவின் நடவடிக்கைகளுக்கு ஆதரவு அளிப்போம் என உறுப்பு நாடுகளும், சர்வதேச அமைப்புகளும் அறிவித்து உள்ளன.




**கூட்டுச் செயல்திட்டம்**

அந்தவகையில் இந்தியாவின் ஜி-20 செயல் திட்டங்களுக்கு முழு ஆதரவு அளிப்பதாக சர்வதேச நாணய நிதியம் அறிவித்து உள்ளது. இந்த அமைப்பின் திட்டம் மற்றும் கொள்கை மறுஆய்வுத்துறை இயக்குனர் செய்லா பசர்பாசியோக்லு செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

மிகவும் வளமான எதிர்காலத்திற்காக அவர்கள் (இந்தியா) ஒரு கூட்டு செயல்திட்டத்தை உருவாக்குகிறார்கள். தற்போதைய உலகளாவிய நெருக்கடிகளில் உண்மையில் அவசர கவனம் தேவைப்படும் பிரச்சினைக ளில் ஒருமித்த கருத்தைப் பெறுவதற்கான வாய்ப்பாக இதை பயன்படுத்த திட்டமிட்டுள்ளனர். அந்தவகையில் இந்தியாவின் ஜி-20 செயல் திட்டங்களுக்கு முழு ஆதரவு அளிக்கிறோம். மாநாட்டு பிரகடனம் 'ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம்' என்ற கருப்பொருளை இந்தியா அறிவித்து உள்ளது. அதாவது வேறுபாடுகளை ஒதுக்கி வைத்துவிட்டு, உள்ளூர் அளவில், கூட்டாட்சி மட்டத்தில், சர்வதேச அளவில் பணிபுரிய வேண்டியதன் அவசியத்தை இந்தியா முதன்மைப் படுத்துகிறது.

இந்தோனேசியாவில் நடந்து முடிந்த ஜி-20 உச்சி மாநாட்டு பிரகடனத்தை உருவாக்கியத்தில் இந்தியா முக்கிய பங்காற்றியது. இது ஒரு பெரிய சாதனையாகும். இதில் மிகவும் வலுவான மொழி இருந்தது. பெரும்பாலான உறுப்பினர்கள் உக்ரைனில் போரைக் கண்டித்தனர். டிஜிட்டல் உள்கட்டமைப்பு ஜி-20 செயல் திட்டங்களைத் தொடர்வதுடன், உலகளாவிய சமூகத்திற்கு முக்கியமான முன்னுரிமைகளையும் இந்தியா அறிவித்துள்ளது. டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பில் இந்தியா முன்னணியில் உள்ளது. நல்ல நிர்வாகத்திற்கு இது மிகவும் முக்கியமானது. மேலும் சமத்துவமின்மை மற்றும் நியாயமான அல்லது வெளிப்படையான பொது வருவாய்கள் மற்றும் செலவுகள் பற்றிய கவலைகள் இருக்கும். தற்போதைய சூழ்நிலையில் இது மிகவும் முக்கியமானது. இந்த டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பு இந்தியாவின் ஜி-20 தலைமை பதவியின் முக்கிய கருப்பொருளாக இருக்கும். - இவ்வாறு செய்லா பசர்பாசியோக்லு கூறினார்

# திருவண்ணாமலையில் மகாதீபத்திற்கான 1,150 மீற்றர் நீளத் திரிக்கு சிறப்பு பூஜை!



திருவண்ணாமலை, டிசெ.04

திருவண்ணாமலையில் 2,668 அடி உயர முள்ள மலையின் உச்சியில் மகாதீபம் ஏற்றப்பட உள்ளது.

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவிலில் கார்த்திகை தீபத்திருவிழா கோலாகலமாக நடைபெற்று வருகிறது. இதையொட்டி தினமும் காலையில் உண்ணாமலை அம்மன் சமேத அருணாசலேஸ்வரர், பராசக்தி அம்மன், சண்டிகேஸ்வரர் ஆகிய பஞ்சமூர்த்திகள் வெவ் வேறு வாகனங்களில் கோவிலை சுற்றியுள்ள மாடவீதியில் வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கின்றனர். இந்த நிலையில், விழாவின் சிகர நிகழ்ச் சியான மகா தீபம் நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை மாலையில் திருவண்ணாமலை நகரின் மைய பகுதியில் உள்ள 2,668 அடி உயர முள்ள மலை யின் உச்சியில் ஏற் றப்பட உள்ளது. முன்னதாக அன்று அதிகாலை 4 மணி அளவில் கோவிலில் பரணி தீபம் ஏற்றப்பட உள்ளது. இந்நிலை யில், தீபத் திருவிழாவை முன் னிட்டு மலை உச்சியில் ஏற்றப் படும் மகா தீபத்திற்கு பயன்படுத்தப்படும் 1,150 மீட்டர் திரிக்கு சிறப்பு பூஜை நடைபெற்றது. தீபத்திரிக்கு சந்தனம், உள்ளிட்ட பொருட்களால் சிறப்பு பூஜை செய்யப்பட்டது. மகா தீபத்தை காண இந்த ஆண்டு 30 லட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் திருவண்ணாமலைக்கு வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கான அனைத்து அடிப்படை பணிகளும் மாவட்ட நிர்வாகம் மற்றும் பொலிஸார் மூலம் செய்யப்பட்டு வருகிறது.



# "என் நண்பர் நரேந்திர மோடி எங்களை ஒன்றிணைப்பார்!"

## பிரான்ஸ் அதிபர் நம்பிக்கைச் செய்தி

பாரிஸ்,டிசெ.04

இந்தியாவின்ஜி20தலைமைப் பதவிக்கு பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான் வாழ்த்து தெரிவித்தார்.

இந்தோனேஷியாவில் நடைபெற்ற ஜி20 மாநாட்டின் முடிவில் ஜி20 அமைப்பிற்கு, இந்த ஆண்டு இந்தியா தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ளது. இதற்கான மாநாட்டையும் இந்தியா அடுத்த ஆண்டு தலைமை ஏற்று நடத்தவுள்ளது. இந்த பொறுப்பு பிரதமர் நரேந்திர மோடி வசம் ஒப்படைக்கப்பட்டது. இதையடுத்து ஜி 20 மாநாடு அடுத்த ஆண்டு நடந்து முடியும் வரை இந்த தலைமை பொறுப்பு இந்தியா வசம் இருக்கும்.

இந்நிலையில், ஜி 20 அமைப்பின்தலைமைப்பொறுப்பை ஏற்றுள்ள இந்தியாவுக்குபிரான்ஸ் தனதுஆதரவைதெரிவித்துள்ளது. பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில் கூறியிருப்பதாவது:-

ஒரு பூமி.ஒரு குடும்பம்.ஒரு எதிர்காலம். ஜி20தலைவர்பதவியை இந்தியா கைப்பற்றியது!"

எனது நண்பர் நரேந்திர மோடி, 'உலகில் சமாதானத்தை உருவாக்கிட, அமைதியைக் கட்டியெழுப்ப இன்னும்நிலையான உலகைக் கொண்டு வந்திட எங்களை ஒன்றிணைப்பார்' என நம்புகிறேன் என பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான் தெரிவித்தார்.

# ராகுல் காந்தியின் பாதயாத்திரை இன்று மாலை ராஜஸ்தானுக்குள்

கடந்த செப்டம்பர் மாதம் 7 ஆம் திகதி கன்னியாகுமரியில் தொடங்கிய ராகுல்காந்தியின் இந்திய ஒற்றுமை பாதயாத்திரை பயணம், கடந்த மாதம் 23 ஆம் திகதி மகாராஷ்டிராவிலிருந்து மத்தியப் பிரதேசத்தின் புர்ஹான்பூர் மாவட்டத்திற்குள் நுழைந்தது. 88 ஆவது நாளாக இன்று காலை மத்திய பிரதேச மாநிலம் அகர் மால்வா மாவட்டத்தில் நடைபெற்று வருகிறது. காங்கிரஸ் மக்களவை உறுப்பினர் நகுல் நாத், முன்னாள் மத்திய மந்திரி அருண் யாதவ், காங்கிரஸ் எம்.எல்.ஏ. பிரியவ்ரத் சிங் ஆகியோரும் இந்த அணிவகுப்பில் ராகுல் காந்தியுடன் நடந்து சென்றனர். மத்திய பிரதேச மாநிலத்தில் புர்ஹான்பூர், கந்த்வா, கர்கோன், இந்தூர் மற்றும் உஜ்ஜைனி மாவட்டங்களை கடந்து மொத்தம் 380 கிலோ மீட்டர் தூரம் பாத யாத்திரை நடைபெற்றுள்ளது. இந்த பாத யாத்திரையின்போது உஜ்ஜயினியில் உள்ள 12 ஜோதிலிங்கங்களில் ஒன்றான மகா காளேஸ்வரர் கோயிலுக்கு சென்ற ராகுல்காந்தி வழிபாடு நடத்தினார்.

இந்நிலையில் இன்று மாலை ராஜஸ்தான் மாநிலத்திற்குள் ராகுலின் யாத்திரை நுழைகிறது. அங்குள்ள சான்வ்லி கிராமத்தில் மத்தியப் பிரதேச காங்கிரஸ் உறுப்பினர்கள், ராஜஸ்தானை சேர்ந்த கட்சி உறுப்பினர்களிடம் தேசியக் கொடியை ஒப்படைக்கின்றனர்.

ராஜஸ்தான் மாநிலத்தில் காங்கிரஸ் ஆட்சி நடைபெறுவதால் ராகுலுக்கு உற்சாக வரவேற்பு அளிக்க அம்மாநில காங்கிரஸார் திட்டமிட்டுள்ளனர்.



# அரிய வகை புலி இனப் பூனை மூதூர் ஜபல் நகரில் பிடிபட்டது



(பாறுக் ஷிஹான்)

அரிய வகை புலி இனத்தைச் சேர்ந்த FISHING CAT என அழைக்கப்படும் மீன்பிடி பூனை ஒன்று திருகோணமலை மூதூர் 64 ஆம் கட்டை ஜபல் நகர் பகுதியில் பிடிக்கப்பட்டுள்ளது

இது பின்னர் வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

இப்பகுதியில் நீண்ட காலமாக வீடுகளில் உள்ள கோழி உள்ளிட்ட வளர்ப்பு பிராணிகளை வேட்டையாடி வந்த நிலையில் பொதுமக்களினால் நேற்று முந்தினம் டிசம்பர் 2 திகதி அன்று பிடிக்கப்பட்டு வனஜீவராசிகள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது..

இப்பூனையினால் தாம் பல்வேறு அச்சுறுத்தலுக்கு உள்ளாகினர் எனப் பிரதேச மக்கள் தெரிவித்தனர். இந்தப் மீன்பிடிப் பூனை இலங்கையில் கொடுப்புலி என அழைக்கப்படுவதுடன் ஒரு நடுத்தர காட்டுப்பூனையாக குறிப்பிடப்படுகின்றது. இவை தென் மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் காணப்படுகின்றன.

# வாழைச்சேனையில் பெண் ஒருவர் போதைப்பொருளுடன் சிக்கினார்

மட்டக்களப்பு-வாழைச்சேனை பகுதியில் ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப்பொருளுடன் பெண்ணொருவர் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இராணுவ புலனாய்வுப்பிரிவுக் குக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் வாழைச்சேனை பிறைந்துறைச்சேனையில் வைத்து இந்தப்பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து 01 கிராம் 400 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும் 08கிராம் ஹெரோயின் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஐஸ் போதைப்பொருளின் பெறுமதி 25ஆயிரம் ரூபா எனவும் ஹெரோயினின் பெறுமதி நான்கு லட்சம் ரூபா எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# அல் ஹாமியா அரபுக் கல்லூரியின் ஆறாவது பட்டமளிப்பு விழா நேற்று






(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டம் கல்முனை பகுதியில் அமைந்துள்ள அல் ஹாமியா அரபுக்கல்லூரியின் ஆறாவது பட்டமளிப்பு விழா அரபுக்கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

அரபுக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் ஏற்பாட்டில் நேற்று சனிக்கிழமை அரபுக்கல்லூரி வளாகத்தில் கல்லூரி அதிபர் ஏ.சி தஸ்தீக் மதனி தலைமையில் வரவேற்புரையுடன் பட்டமளிப்பு விழா சிறப்பாக இடம்பெற்றது.

இவ்விழாவில் பேராதனை பல்கலைக்கழக அரபு மற்றும் இஸ்லாமிய கற்கைகள் பிரிவு பேராசிரியர் கலாநிதி எம்.எஸ்.எம் சலீம் பிரதம அதிதியாகவும் கல்லூரியின் ஆளுநர் சபைத் தலைவர் சட்டத்தரணி ஆரிப் சம்சுதீன் கௌரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தனர்.

மலர் அறிமுக உரையை அரபுக்கல்லூரியின் பழைய மாணவர் சங்க தலைவர் ஏ.எல் நாஸிர் கனி ஆற்றினார். நூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் பட்டம் பெற்றனர். விழாக்குழுத் தலைவரும் முன்னாள் கல்முனை பிரதேச சபை உறுப்பினரும் ஓய்வு பெற்ற அதிபருமான அப்துல் கபூரின் நன்றி உரையுடன் நிகழ்வு நிறைவடைந்தது.

அம்பாறை மாவட்டத்தில் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட இஸ்லாமாபாத் பகுதியில் அமைந்துள்ள அல்-ஹாமியா அரபுக் கல்லூரி கலாபீடம் ஸ்தாபிக்கப்படும்போது இந்நாட்டில் சுமார் 75 அரபுக் கல்லூரிகளே காணப்பட்டன.

அம்பாறை மாவட்டத்தில் அட்டாளைச்சேனை கிழக்கிலங்கை ர்கிய்யா அரபுக் கல்லூரி, சம்மாந்துறை தப்லீகுல் இஸ்லாம் அரபுக் கல்லூரி என்பனவற்றுக்கு அடுத்தபடியாக 1979.12.07 ஆம் திகதி உருவாக்கப்பட்ட மிகப்பிரசித்தி பெற்ற மூன்றாவது அரபுக் கல்லூரியாக கல்முனை அல்- ஹாமியா அரபுக் கல்லூரி விளங்குகின்றது.

இது ஹிமாயதுல் இஸ்லாம் இயக்கத்தின் கீழ் இயங்கி வருகின்றது.

# இளைய தலைமுறையினருக்கான வழிகாட்டல் மாநாடு நிந்தவூரில்

## பி.எச்.அப்துல் ஹமீத்தின் பங்களிப்புடன்





(நூருள் ஹுதா உமர், எஸ். அஷ்ரப்கான்)


இளைய தலைமுறையினருக்காக ஏற்பாடு செய்யப்பட்ட இளைஞர் வழிகாட்டல் மாநாடு நேற்று சனிக்கிழமை காலை கல்முனை வலய நிந்தவூர் அல் –

அஷ்ரக் தேசிய பாடசாலையின் காஸிமி கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில், பாடசாலை அதிபர் ஏ. அப்துல் கபூரின் பங்களிப்புடன், அஸ்ஸெய்யத் றஸ்மி மௌலானாவின் ஒருங்கமைப்பில் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம். எஸ். சஹுதுல் நஜீமின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், சர்வதேச அளவில் புகழ்பெற்ற ஒலிபரப்பாளர் பி.எச். அப்துல் ஹமீத் பிரதம அதிதியாகவும் பிரதம பேச்சாளராகவும் கலந்து கொண்டார்.

மேலும் இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ. ஜெகதீசன், அகில இலங்கை ஜம்மியதுல் உலமா சபை பொதுச்செயலாளர் அஷ்ஸெக் மௌலவி அர்கம் நூறாமித், முஸ்லிம் சமய பண்பாட்டாலுவல்கள் திணைக்கள பிரதிப்பணிப்பாளர், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் வைத்தியர் எம்.பி. அப்துல் வாஜித், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் ஆசாத் எம் ஹனிபா, கல்முனை கல்வி வலய உதவிக்கல்வி பணிப்பாளர்கள், பிரதிக்கல்வி பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை பழைய மாணவர் சங்க பிரதிநிதிகள், மாணவ தலைவர்கள், பிரதேச முக்கியஸ்தர்கள், கல்விமான்கள், சிவில் அமைப்புக்களின் பிரதானிகள், புகழ்பெற்ற ஊடகவியலாளர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். அல் – அஷ்ரக் தேசிய பாடசாலையிலிருந்து மாணவ பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளுக்கு இந்நிகழ்வில் வைத்து பாராட்டு சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

# கந்தளாயில் சிறுவர்களிடம் சிக்கிய தோட்டாக்கள் மீட்பு



கந்தளாய் அக்போபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சீனிபுர பகுதியில் ஆயுதங்களுக்கு பயன்படுத்தும் தோட்டாக்கள் நேற்று மாலை மீட்கப்பட்டுள்ளன என அக்போபுர பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சீனிபுர பகுதியில் சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்த வேளையில் சந்தேகத்துக்குரிய பைப் (குழாய்) ஒன்றில் தோட்டாக்கள் இருந்துள்ளன.

அதனை சிறுவர்கள் பெற்றோருக்கு தெரியப்படுத்திய பின் அக்போபுர பொலிஸாருக்கு தகவல் வழங்கியதை அடுத்து அவை மீட்கப்பட்டன என்நப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அக்போபுர குற்றத்தடுப்பு பொலிஸார் அனைத்தையும் மீட்டு இது குறித்த மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

# நாடுகடந்த தமிழீழ அரசின் அரசவை அமர்வு முப்பொருள்களை மையமாகவைத்து ஆரம்பம்!




தாயகம், தேசியம், அரசியல் இறைமை எனும் ஈழத்தமிழர் தேசத்தின் அரசியல் பெருவிருப்பின் ஜனநாயக வடிவமாகத் திகளும் நாடுகடந்த தமிழீழ அர சாங்கத்தின் நேரடி அரசவை அமர்வு பிரித்தானியாவில் ஆரம் பமாகியது.

வெள்ளிக்கிழமை தொடங்கியுள்ள இந்த அமர்வு மூன்று நாள்கள் தொடர் நிகழ்வாக பக்க நிகழ்வுகளுடன் இடம்பெற இருக்கின்றது.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவை உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள், தோழமையாளர்கள் உட்பட பலரும் புலம்பெயர் தேசங்களில் இருந்து நேரடியாக வந்து லண்டனில் முகாமிட்டிருக்கும் இவ்வேளை, உலக வள அறிஞர்கள் பலரும் இந்த அமர்வுகளில் பங்கெடுத்து. கருத்துரைகளை வழங்க இருக்கின்றனர்.

– தமிழீழ தேசத்தின் மீதான சிங்கள அரச ஆக்கிரமிப்பும், தொடரும் நில அபகரிப்பும் –உலக உணவு நெருக்கடியும் தமிழர் தேசத்தின் சவால்களும் – பூமி வெப்பமடைதலும் அதன் இயற்கை மாற்றங்களை எதிர் கொள்ளுத லும் ஆகிய மூன்று விடயங்களை பேசுபொருளாக கொண்டு இடம்பெறுகின்ற இந்த அமர்வில் அமைச்சுக்களின் அறிக்கைகள், விவாதங்கள், கருத்துரைகள், தீர்மானங்கள் என நாடுகடந்த தமிழீழ அர சாங் கத்தின் ஜனநாயக வலிமையை வெளிப்படுத்தும் நிகழ்வுகள் இடம்பெற இருக்கின்றன.

## முன்னாள் சீன ஜனாதிபதியின் மறைவிற்கு இலங்கை ஜனாதிபதி இரங்கல் தெரிவிப்பு!



சீனாவின் முன்னாள் ஜனாதிபதி ஜியாங் ஜெமினின் மறைவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது இரங்கலைத் தெரிவித்துள்ளார். வெள்ளிக்கிழமை கொழும் பில் உள்ள சீனத் தூதரகத்துக்குச் சென்ற ஜனாதிபதி, அங்கு வைக்கப்பட்டிருந்த இரங்கல் குறிப்பேட்டில் விசேட குறிப்பைப் பதிவு செய்து, மறைந்த முன் னாள் சீன ஜனாதிபதிக்கு இரங்கலைத் தெரிவித்தார்.

இதன் போது கருத்து வெளியிட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சீனாவில் சிறப்பான பங்களிப்பை வழங்கிய சிறந்த தலைவர் ஜியாங் ஜெமின் எனக் குறிப்பிட்டார்.



## இலங்கையில் பிறந்த இளைஞன் சிட்னி விபத்தில் பரிதாப சாவு!

கடந்த வியாழக்கிழமை ஆஸ்திரேலியாவின் சிட்னியில் இடம் பெற்ற விபத்தில் இலங்கை குடும்பத்தை சேர்ந்த 17 மாணவன் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

கல்வின் விஜயவீர என்ற மாணவரே உயிரிழந்துள்ளார்.

சிட்னியின் வடமேற்கில் உள்ள கார்லிங்போட்டில் உள்ள பாடசாலைக்கு சக மாணவர்களுடன் சென்றுகொண்டிருந்த கல்வின்விஜயவீர விபத்தில் சிக்குண்டு உயிரிழந்துள்ளார்.

வான் ஒன்றுடன் மற்றுமொரு வாகனம் மோதிய விபத்தில் இவர் உயிரிழந்துள்ளார்– 90 வயது பெண்ணொருவர் செலுத்திய மிட்சுபி லான்சர் செடான் வாகனம் இன்னுமொரு வாகனத்துடன் மோதியதில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

மாணவர் காருக்கு அடியில் சிக்குப்பட்டார். அவரைக் காப்பாற்றுவதற்கு அவசரசேவையினர் மேற்கொண்ட முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. கொழும்பில் பிறந்த இளைஞனே இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

## சுன்னாகம் லயன்ஸ் கழக ஏற்பாட்டில் மாணவர்களிடையே சதுரங்க போட்டி!

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் மாணவர்கள் இடையிலான சதுரங்க சுற்றுப்போட்டி எதிர்வரும் புதன்கிழமை காலை 8 மணிக்கு யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரக் கல்லூரியில் நடைபெற உள்ளது.

05, 07, 09, 11, 13 வயதுடைய ஆண், பெண் இருபாலாருக்கும் மற்றும் 13 வயதுக்கு மேற்பட்ட திறந்த போட்டியாளர்கள் என 12 போட்டிகள் நடத்தப்பட உள்ளன.

போட்டிக்கான நுழைவுக் கட்டணம் 500 ரூபா எனவும் விவரங்களுக்கு இணைப்பாளர் லயன் ஐ.மயூரன் – 0773954124 உடன் தொடர்புகொள்ளுமாறும் சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினர் தெரிவித்துள்ளனர்.

சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் க.டினேஸ் தலைமையில் நடைபெறும் பரிசளிப்பு நிகழ்வில் லயன்ஸ் கழகத்தின் ஆளுநர் சபையின் தலைமைத்துவ இணைப்பாளர் லயன் ம.மயூரதன் பிரதம விருந்தினராகவும், கொக்குவில் நாமகள் வித்தியாலய அதிபர் லயன் ஜெ.ரஜீவன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து நிகழ்வைச் சிறப்பிப்பர்.

சகல பிரிவுகளிலும் வெற்றிபெறும் முதல் மூன்று போட்டியாளர்களுக்கும் விருதுகள் வழங்கப்படுவதுடன் போட்டியில் கலந்துகொள்ளும் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# காணாமல் போன ஆள்கள் பற்றிய அலுவலகத்தினர் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளிடம் விசாரணை







காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தினர் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களிடம் வியாழக்கிழமை கிளிநொச்சியில் விசாரணைகளை மேற் கொண்டிருந்தனர். கிளிநொச்சி மாவட்ட செயலக திறன் விருத்தி பயிற்சி நிலையத்தில் இந்த விசாரணைகள் இடம்பெற்றன . வெள்ளிக்கிழமை இரண்டாவது நாளாகவும் நேற்று (சனிக்கிழமை) மூன்றாவது நாளாகவும் விசாரணைகள் மேற் கொள்ளப்பட்டன. வெள்ளிக்கிழமை 60 பேர் வரை விசாரணைகளுக்கு சமுகம் அளித்திருந்தனர். கடந்த 2000 ஆம் ஆண்டுகளுக்கு பின்பு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சாட்சியங் களோடு விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

## புதிதாக இரு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பிக்கப்பட்டுள்ளன. யாழ். பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தின் கீழ் நடத்தப் படவுள்ள இரு கற்கைநெறிகளினதும் அறிமுக நிகழ்வு நேற்றுக் காலை 9 மணியளவில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

இந்த அறிமுக நிகழ்வில் துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கற்கை நெறிகளை ஆரம்பித்து வைத்தார்.

நிகழ்வில் முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடாதிபதி பேராசிரியர் பாலசுந்தரம் நிமலதாசன், வங்கியலும் நிதியும் டிப்ளோமா கற்கைநெறி இணைப்பாளர் பேராசிரியர் திருமதி எஸ். கெங்காதரன், தொழில்சார் ஆங்கில டிப்ளோமா கற்கைநெறி இணைப்பாளர் கலாநிதி மு. சண்முகநாதன், பேரவை உறுப்பினர்கள், இலங்கை வங்கியின் உதவிப் பொது முகாமையாளர், வங்கிக் கிளைகளின் முகாமையாளர்கள், பேராசிரியர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலைய உத்தியோகத்தர்கள் மற்றும் கற்கை நெறிகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

இந்தக் கற்கைநெறிகளுக்கான வளவாளர்களாக அந்தந்தத் துறைகளில் தேர்ச்சி பெற்ற தொழில்சார் வல்லுநர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

சமூகத்தின் தேவையைச் செவ்வனே உணர்ந்து, அச்சமூகப் பொறுப்பை நிறைவேற்றும் ஒரு செயற்பாடாக இந்த இரு டிப்ளோமா கற்கைகளையும் யாழ். பல்கலைக்கழகம் ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வின் போது உரையாற்றிய துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குணராஜா, இந்தக் கற்கைநெறிகளின் முக்கியத்துவம், அதை எவ்வாறு சமூகப் பொறுப்புணர்வுடன் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது, கற்கைநெறிகளின் முடிவில் மாணவர்கள் பெறக் கூடிய நன்மைகள் என்பவற்றைக் குறித்துரைத்திருந்தார்.

நாட்டின் பொருளாதார நிலை, அதற்காக நாம் ஒவ்வொருவரும் ஆற்ற வேண்டிய பங்களிப்பு பற்றியும் அவர் தனது உரையில் தெளிவுபடுத்தியிருந்தார்.

## தாய்மார்களை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் பொருளாதார நெருக்கடி ஒன்று ஏற்பட்டதைத் தொடர்ந்து எவ்வித யோசனைகளுமின்றி இரண்டு வயதுக்கும் குறைந்த குழந்தைகளையுடைய தாய்மாரை வெளிநாட்டுக்கு அனுப்புவதற்கான அமைச்சரவை அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டது.

மந்தபோசனையால் சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இன்று அதிகளவு பேசப்படுகின்றது.

அவ்வாறு இருக்கும்போது தாயின் உடற்சூடு தேவைப்படும் இரண்டு வயது குழந்தையை விட்டுவிட்டு தாய்மாரை வெளிநாட்டுக்கு அனுப்புவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டால், மந்தபோசனைப் பிரச்சினைக்கு மேலாக உளநல பாதிப்பை உடைய சமூகமே உருவாகும்.

சிறுவர்களே நாட்டின் எதிர்காலம். சிறுவர்களின் வாழ்க்கையில் விளையாடுவது சிறந்ததல்ல.

சிறுவர்கள் தொடர்பிலான அமைச்சு எனக்கு கையளிக்கப்பட்டபோது நான் அதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளவில்லை.

இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள சமூக பிரச்சினைகளைப் பார்க்கும் போது, அந்தச் சமூகப் பிரச்சினைகளுக்குக் காரணமான சிறுவர்களின் பெற்றோர் வெளிநாடுகளில் வாழ்ந்த தரப்பினராக இருப்பர்.

எனவே, அவ்வாறான நிலைமைகள் மீண்டும் ஏற்படுவதற்கு இடமளிக்கப்படக்கூடாது. சிறுவர்களின் எதிர்காலம் குறித்து கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

அடுத்ததாக ஓமான் விவகாரம். வெளிநாட்டுவேலைவாய்ப்புப்பணியகம் என்பது தற்போது புதிதாகச் செய்திகளை வெளியிட்டுக்கொண்டு இருக்கின்றது.

ஓமான் விடயம் என்பது புதிய விடயமல்ல. தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த விடயமே இது. டுபாய் நாட்டுக்கு சுற்றுலா விசாவில் சென்று அங்கிருந்து ஓமானுக்கும் பயணிக்க முடியும்.

ஓமானுக்கு வேலைவாய்ப்பு விசா இன்றி வருவார்களாயின் ஓமான் அரசால் உயர்ஸ்தானிகராலயத்துக்கு அறிவித்து உயர்ஸ்தானிகரின் தலையீட்டுடன் வேலைவாய்ப்பு விசாவைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

ஓமான் என்பது எம்மை பொறுத்தவரையில் மிகவும் முக்கியமான நாடாகும். சிங்களவர்களுக்கு உரிமையான ஹோட்டல்கள் அங்கு காணப்படுகின்றன. ஆடைத்தொழிற்சாலை பணிக்கே அங்கு அதிகம் செல்கின்றனர்.

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது ஓமான் என்பது வித்தியாசமான நாடாகும். இலங்கையர்களை அவர்கள் மிகவும் கௌரவத்துடன் நடத்துகின்றனர்.

எனவே, நாட்டில் தற்போது பேசுபொருளாக மாறியுள்ள ஓமான் விவகாரம் என்பது அதிகாரிகளின் கீழ்த்தரமான செயற்பாடுகள் காரணமாகவே ஏற்பட்டுள்ளது – என்றார்.

## 400 வெளிநாட்டு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொழில் அமைச்சர் மனுஷநாணயக்கார தெரிவித்தார்.

நேற்றைய நாடாளுமன்ற அமர்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அதுமட்டுமல்லாது டொலர்கள் இன்றி உண்டியல் வடிவில் கமிஷன் பணத்தை நாட்டுக்குக் கொண்டு வந்த பல வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களும் தற்காலிகமாகத் தடைசெய்யப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இரண்டு வயதுக்கும் குறைந்த வயதுடைய குழந்தைகளைக் கொண்ட தாய்மாரை வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக அனுப்புவதில்லை.

மாதக்கணக்குகளேயான குழந்தைகளையுடைய தாய்மாரை மோசடியாக ஆவணங்களைத் தயாரித்து வெளிநாட்டுக்கு அனுப்பும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

கிராமசேவகரிடம் மோசடியான முறையில் சான்றிதழைப் பெற்று இவ்வாறான மோசடி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

மோசடியான முறையில் அவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றால் அவர்கள் எந்த நாட்டுக்குச் சென்றார்கள் என்பது கூடத் தெரியாது. இவ்வாறு செல்பவர்களின் தகவல்களும் எமக்குத் தெரியாது. வயதுகளை மாற்றி, மிகவும் மோசடியாக வெளிநாடுகளுக்குப் பணிப்பெண்களை அனுப்புவர்களை எமது வலையமைப்புக்குள் உள்வாங்கினோம்.

இதன் காரணமாகவே 5 வயது என்று காணப்பட்ட வயதெல்லையை இரண்டரை வயதாக மாற்றி, மிகவும் மோசடியாக வெளிநாடுகளுக்கு பணிப்பெண்களை அனுப்புவர்களை எமது வலையமைப்புக்கு உள்வாங்கினோம்.

இதற்கூடாக இரண்டரை வயது தொடக்கம் 18 வரையான சிறுவர்களின் பாதுகாப்பை எமது கண்காணிப்பின் கீழ் கொண்டுவர முடிந்தது.

இதற்கமைவாக விசேட திட்டங்களை நாம் முன்னெடுத்து வருகின்றோம் – என்றார்.

## மக்களின் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேடும் பணியில் ஈடுபட்டுள்ள களமிறங்கியுள்ள பொலிஸார், பொதுமக்களின் உதவியையும் நாடியுள்ளனர்.

குறித்த இளைஞர் காணாமல் போயுள்ளார் அவரது தாயார் மாவனெல்ல பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் பொதுமக்களிடம் பொலிஸார் உதவி கோரியுள்ளனர்.

மாவனெல்ல, ஹிகுல பிரதேசத்தைச் சேர்ந்த விதுஷிகா நவஞ்சன பண்டார என்ற 20 வயது இளைஞரே இவ்வாறு காணாமல்போயுள்ளார்.

குறித்த இளைஞர் கடந்த ஜூன் மாதம் புத்தளம், ஆனமடுவ பிரதேசத்தில் உள்ள விகாரை ஒன்றில் துறவற வாழ்வுக்குச் சென்றுள்ளார். கடந்த ஒக்டோபர் மாதம், தனது பெற்றோரைப் பார்ப்பதற்காக வீடு திரும்பிய அவர், கோயிலுக்குச் சென்றிருந்த நிலையில், காணாமல்போயுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடைசியாக குறித்த இளைஞர் தனது சகோதரியுடன் தொடர்புகொண்டு தான் கேகாலையில் இருக்கின்றார் என்று தெரிவித்துள்ளார். அதன் பின்னர் இளைஞர் தொடர்பில் எந்தத் தகவலும் தெரிவிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, காணாமல்போன இளைஞர் தொடர்பில் ஏதேனும் தகவல் தெரிந்தால் 071 – 8591418 (பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, மாவனெல்ல), 035 2247222 (மாவனல்லை பொலிஸ் நிலையம்) ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்குத் தொடர்பு கொள்ளுமாறு பொலிஸார் பொதுமக்களைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

## தமிழ் முற்போக்கு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுச்செயலாளராகச் செயற்பட்ட சந்திரா சாப்டர், தனது பதவியை அண்மையில் இராஜிநாமா செய்தார்.

எனினும், புதிய பொதுச்செயலாளர் இன்னமும் நியமிக்கப்படவில்லை.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் ஸ்தாபக பொதுச்செயலாளராக மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உறுப்பினர் லோரன்ஸ் செயற்பட்டார்.

எனவே, புதிய பொதுச்செயலாளர் பதவியை மலையக மக்கள் முன்னணியின் தற்போதைய பொதுச்செயலாளர் பேராசிரியர் விஜயசந்திரனுக்கு வழங்கப்பட வேண்டும் எனப் பல தரப்பினரும் கோரிக்கை விடுத்துவருகின்றனர்.

இந்நிலையிலேயே புதிய பொதுச்செயலாளரை நியமிக்குமாறு மலையக மக்கள் முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

## பெரும் சிக்கலில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து 2020 ஆம் ஆண்டு முதலே எதிர்க்கட்சியாகச் சுட்டிக்காட்டிய போதிலும் அப்போதைய ஆட்சியாளர்கள் அதனை கேலி செய்து நாட்டை தவறாக வழிநடத்தினார்கள்.

இவ்வாறான நிலையில் நாட்டின் பொருளாதாரக் கொள்கைகள் தொடர்பில் அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றது?

யார் என்ன சொன்னாலும் சர்வதேச, உள்நாட்டுக் கவனம் இந்த விடயத்தில் செலுத்தப்படவில்லை.

அமெரிக்கா தலைமையிலான பல மேற்கத்திய நாடுகள் எமது நாட்டில் அரசியல் மறுசீரமைப்புகள் மேற்கொள்ளப்படும் வரை எந்தவித உதவிகளையும் செய்வதில்லை என்று கூறியுள்ளன.

8 மாதங்களில் 477 மருத்துவர்களும் 300 பொறியியலாளர்களும் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

குழந்தைகளின் ஊட்டச்சத்து குறைபாடு அதிகரித்து வருகின்றது. சுகாதாரத்துறையில் மருந்துகள் பற்றாக்குறை உள்ளிட்ட பல பிரச்சினைகள் நிலவி வருகின்றன. இந்த அனைத்துப் பிரச்சினைகளுக்கும் ஒரே தீர்வு தேர்தல் மூலம் புதிய மக்கள் ஆணையைப் பெறுவதுதான் – என்றார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.12.2022 இல் வெளியிடப்பெற்றது.